1995 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலித்த காரணத்தால்தான் இது போன்ற தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக மானியத் தொகை 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாகவும்; விளிம்புத் தொகை 85 ஆயிரத்திலிருந்து 1 ¼லட்சமாகவும், உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு இணங்க (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு போதுமான அளவுக்கு மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 460, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

460—

கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல்

*38823—**திரு எச். எம். ராஜு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தின் கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

முற்பகல் 11-15

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் ஒரு குளிர் பிரதேசம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மலைப் பிரதேசம் என்பதாலும் அங்குள்ள மாவட்டத்து

[1995 ஏப்ரல் 26

மக்களுக்குக் கண்டிப்பாக கம்பளி ஆடைகள் அதிக அளவிலே தேவைப்படுகிறது அதிலும் கதர்துறையிலே இருக்கும் துணிகளுக்கு அதிக கிராக்கி என்ற அளவிலே, அதை அதிக அளவிலே மக்கள் உபயோகித்துக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் அதற்கு வேண்டிய உரோமம் ஆடுகளின் மூலமாகவும் முயல்களின் மூலமாகவும் முக்கியமாக நியுசிலாந்து நாடு மற்றும் ஜெர்மனி நாட்டிலுள்ள சிறப்பான அங்கோரா இன முயல்களின் ஒரு கிலோ உரோமத்திற்கு ரூபாய் 600 முதல் ஆயிரம் வரை மார்க்கெட்டில் கிடைப்பதனாலும், இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவது மிகவும் முக்கியமாக இருப்பதனால், அரசு இதனை மீண்டும் பரிசீலனை செய்து, நீலகிரி மாவட்டத்திற்கு அந்த மாவட்ட மக்களுக்கு கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைத்திட அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கம்பளி ஆடைகளைத் தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் தேவையான அளவு நீலகிரி மாவட்டத்திலே கிடைக்கப் பெறவில்லை. இந்த ஆடைகள் தயாரிப்பதற்கான தேவையான நூல்கள் வட இந்தியாவில் இருக்கக்கூடிய ஜெய்ப்பூர் பகுதிகளிலே இருந்துதான் வரவழைக்கப்பட்டு, அந்த ஆடைகள் தயாரிக்கப்பட்டு நீலகிரி மாவட்டம் போன்ற பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஆகவே, அங்கே கம்பளி ஆடைகள் தயாரிக்கக்கூடிய அலகு அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை ஒன்றை அங்கே அமைப்பதால் இந்தத் துறையின் மூலம் தாய்மார்களுக்கு அதிக அளவிலே வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு சாத்தியம் இருக்கிறது. அப்படியில்லையென்றால் கூட்டுறவுத் துறையின் மூலமாக மாதர்கள் சங்கம் அமைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் மூலமாக தொழிற்சாலையை நிறுவினால்கூட பல்லாயிரக்கணக்கான தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதனால், அதை மீண்டும் அரசு பரிசிலனை செய்து, கண்டிப்பாக நீலகிரி மாவட்டத்து மக்களுக்கு கம்பளி ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வேண்டுமென்று கேட்டு, அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் மூலம் அலகு அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அங்கே 25 நபர்களுக்குக் குறையாமல் முன் வந்தால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கூட்டுறவுச் சங்கம் அமைத்து அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு வாரியத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 92 (vii)--இல் உள்ள சில பதங்களின் பயன்பாடுகளை நிறுத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்ஜெக்ஷன் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், இதில் உங்களுக்கு என்ன அப்ஜெக்ஷன், எந்த விதியின் கீழ் அப்ஜெக்ஷன் செய்ய நீங்கள் அனுமதி கேட்கிறீர்கள்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய விதி 287-ஐத் தளர்த்தி, அந்த விதியின்படி விதி 92 உட்பிரிவு (7)ஐ இங்கே தளர்த்திக் கொடுத்து, மேதகு ஆளுநர் அவர்களைப் பற்றியும், அவர்களுடைய செய்கைக்கு உள்ளர்த்தம்